<u>செய்தி வெளியீடு</u>

தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 03.02.2019 அன்று நடத்தப்பட்ட வரைபட ஓவியர் நிலை-III பதவிக்கான எழுத்துத் தேர்வு மற்றும் 03.03.2019 அன்று நடத்தப்பட்ட தொகுதி-Iல் அடங்கிய பணிகளுக்கான முதனிலைத் தேர்வு, ஆகியவற்றின் எழுத்துத் தேர்வு முடிவுகள் 03.04.2019 அன்று வெளியிடப்பட்டன. அதில் வரைபட ஓவியர் நிலை-III பதவிக்கான சான்றிதழ் சரிபார்ப்பிற்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், 10.04.2019 முதல் 18.04.2019 வரையிலும், தொகுதி-Iல் அடங்கிய பதவிகளுக்கான முதன்மைத்தேர்விற்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் 10.04.2019 முதல் 20.04.2019 வரையிலும் தங்களின் மூலச்சான்றிதழ்களை அரசு கேபிள் டிவி நிறுவனம் நடத்தும் இ-சேவை மையங்கள் மூலமாக பதிவேற்றம் செய்யுமாறு தெரிவிக்கப்பட்டிருந்து, இந்நிலையில் 17.04.2019 முதல் 19.04.2019 வரை தொடர் அரசு விடுமுறை என்பதனைக் கருத்தில் கொண்டும், விண்ணப்பதாரர்களின் நலனுக்காகவும் மேற்குறிப்பிட்ட இரு தெரிவுகளுக்கான சான்றிதழ் பதிவேற்றம் செய்யப்படவேண்டிய கடைசி நாள் 20.04.2019 லிருந்து, 26.04.2019 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

Created by demo-version of Universal Document Converter. Full version doesn't add this stamp.
WWW.PRINT-DRIVER.COM